**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**<u>அவசரக் கூட்ட நடவடிக்கைகள்</u>**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 14.07.2020 திங்கள் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதியில் மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கீழ்காணும் சாலைகளை சீரமைக்க ரூ.100.00 இலட்சம் நிதி தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP-2020-2021)ன் கீழ் ஒதுக்கீடு செய்து தர கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டது. | 186 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது** |

| வ.எண் | வார்டு எண் | பணியின் விவரம் (தார் சாலை பணிகள்) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 3 | அகமுடையர் தெரு | 0.171 | 4.60 | 100.00 |
| 2 | 7 | மருத்துவமனைத் தெரு | 0.465 | 4.25 | |
| 3 | 17 | சிங்களாந்தி தமிழர் தெரு | 0.112 | 4.20 | |
| **பேவர் பிளாக் சாலைகள்** | | | | | |
| 4 | 16 | உரக்கிடங்கு சாலை | 0.100 | 4.00 | |
| 5 | 19 | ஜீவா தெரு | 0.370 | 3.00 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 05 | நந்தவனக்குளத் தெரு | 0.157 | 3.75 | | | |
| | 7 | 06 | நரிக்குறவர் காலனி | 0.426 | 3.70 | | | |
| | 8 | 18 | சிங்களாந்தி ஆதிதிராவிடர் தெரு | 0.340 | 3.00 | | | |
| | | **மொத்தம்** | | **2.101** | | **100.00** | | |

நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் கடித ந.க.எண்.17349/2019/இ3 நாள 14.07.2020-ல் மேற்படி பணிகளை கீழ்காணும் நிதி ஆதார அமைப்பில் (Funding Pattern) மேற்கொள்ள TURIP 2020-2021-க்கான திட்ட அனுமதி வழங்கும் குழு அனுமதியளித்துள்ளதாகவும், இதற்கு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள நகர் மன்ற அனுமதி பெற்று நிர்வாக அனுமதிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட மானிய நிதி ரூ.இலட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு ரூ.இலட்சத் தில்) |
|---|---|---|---|
| திருத்துறைப்பூண்டி | 100.00 | 75.00 | 25.00 |

எனவே மேற்காணும் நிதி ஆதார அடிப்படையில் சாலை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>மேற்படி சாலைப்பணிகள் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதால் மேற்காணும் நிதி ஆதார அடிப்படையில் சாலைப்பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1078/2020/இ-1)** | | |
| 02 | இந்நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் பள்ளிகள் ஏதும் இல்லாத காரணத்தினால், அதற்கான பராமரிப்பு செலவினங்கள் இல்லாததால், இந்நகராட்சியில் சொத்து வரியில் 2.5 சதவீதம் கல்வி வரி சேர்த்து வசூலிக்கப்படுவதில்லை. மேலும், கல்வி வரியின் வாயிலாக ஏற்படும் வரவினமானது நகராட்சி பராமரிப்பிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே செலவிட இயலும் என்பதால் கல்வி வரி வசூலிக்கப்படாதது குறித்து இந்நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படுவதில்லை.<br><br>எனவே, இந்நகராட்சியில் சொத்து வரியுடன் சேர்த்து அரையாண்டிற்கு 2.5 சதவீதம் கல்வி வரி வசூலிப்பதிலிருந்து விலக்களிக்க கோரி அரசிற்கு உரிய பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 983/2020/அ-1)** | 187 | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 03 | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்திடவும், இராமமடத் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயணிகள் நிழலகத்தில் விளம்பர பலகைகள் வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்தினை 01.07.2018 முதல் அனுபவித்து வந்த நிலையில் குத்தகைதாரர் திரு.மூ. கல்விப்பிரியன் த/பெ.மூர்த்தி என்பவர் நவம்பர்-2018-ஆம் மாதத்தின்போது கஜா புயலால் ஏற்பட்ட சேதங்களில் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளதாகவும், தமிழக அரசால் விளம்பர பலகைகள் (Flex Board) வைப்பதற்கு தடை விதித்துள்ளதால் கடந்த ஆண்டும் (2019-2020) நஷ்டத்தை சந்திதுள்ள சூழ்நிலையிலும், நடப்பாண்டு வரை (2019-2020) ஆண்டு செலுத்த வேண்டிய தொகைகள் முழுவதும் செலுத்தப்பட்டுள்ளதாகவும், குத்தகை எடுத்த ஆண்டிலிருந்தே தொடர்ந்து இழப்புகளை சந்தித்து வருவதால் 2020-21ஆம் ஆண்டிற்கான குத்தகை உரிமத்தினை ரத்து செய்து தான் செலுத்திய வைப்புத் தொகை ரூ.75000/-ஐ திரும்ப வழங்கும்படி குத்தகைதாரரால் அளிக்கப்பட்ட 09.07.2020ஆம் தேதிய விண்ணப்பத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br><br>(அ) உரிமத்தை ரத்து செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ஆ) மேற்கண்ட இனத்திற்கு பிளக்ஸ் போர்டு தயாரித்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான செலவினங்களை வருவாய் பொது நிதியில் செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | 188 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>(இ) தணிக்கை ஆண்டுகளில் குத்தகைதாரர் பெயரில் தணிக்கைத் தடைகள் ஏதும் எழாத பட்சத்தில் அன்னாரின் வைப்புத் தொகையை திரும்ப வழங்கவும் ஒப்புதல் வழங்கலாம்.<br><br><u>(ந.க.எண். 782/2018/அ-2)</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>04</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண் 09 முதல் 14 வரை மற்றும் புக் ஸ்டால்-ஐ குத்தகைக்கு விடப்பட்டு 31.01.2020ஆம் தேதியுடன் 9 ஆண்டுகள் நிறைவடைந்த கடைகளுக்கு அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007-ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றியும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.15316/2016/ஆர்-3 நாள் 30.11.2016-ன்படியும், பொதுப்பணித்துறையின் விலை விகிதப்படியும் மற்றும் அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்து அனுபவித்துக்கொள்ள சம்மந்தப்பட்ட குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கி 01.04.2020 முதல் புதிய வாடகை மறுநிர்ணயத்தின்படி வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.
<table>
<tr><th>வ.எ.</th><th>கடை விபரம்</th><th>கடையின் நீளம்(ம) அகலம்</th><th>தற் பொழுது வசூல் செய்யப் படும் வாடகை தொகை</th><th>தற் போ தைய அங் காடி மதிப் பீடு</th><th>பொதுப் பணித்து றை விகிதப் படி வாடகை</th><th>வாடகைமறு நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை</th></tr>
<tr><td></td><td></td><td>(சதுர அடியில்)</td><td>ரூ.</td><td>ரூ.</td><td>ரூ.</td><td>ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண் 09</td><td>9 x 8 =72</td><td>1139</td><td>2500</td><td>1007</td><td>2950</td></tr>
</table>
</td>
<td>189</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண் 10 | 9 x 8 =72 | 1145 | 2500 | 1007 | 2950 |
| 3. | புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண் 11 | 9 x 8 =72 | 1151 | 2500 | 1007 | 2950 |
| 4. | புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண் 12 | 9 x 8 =72 | 1125 | 2500 | 1007 | 2950 |
| 5. | புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண் 13 | 9 x 8 =72 | 1111 | 2500 | 1007 | 2800 |
| 6. | புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண் 14 | 9 x 8 =72 | 1113 | 2500 | 1007 | 2800 |
| 7. | புதிய பேருந்து நிலைய புக் ஸ்டால் | 14 x 9 =126 | 1204 | 4500 | 1578 | 4700 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 6456/2016/அ-2)**

ஓம்/ ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/

**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**<u>இயல்பு கூட்ட நடவடிக்கைகள்</u>**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.07.2020 வெள்ளிக் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 01 | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜூலை-2020 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | 190 | **பதிவு செய்யப் பட்டது** |
| 02 | 2020-2021ஆம் ஆண்டிற்கான இந்நகராட்சியின் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான படிவங்கள், கணிணி உபகரணங்கள், கேட்பு அறிவிப்புகள், எழுதுபொருட்கள் தொடர்புடைய இதர பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>(ந.க.எண். 1536/2018/பி-3)</u>** | 191 | **அனுமதிக் கப்பட்டது** |
| 03 | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண் 50எல்-6073-TATA ACE-க்கு புகை சைலன்சர், டீசல் பில்டர் மற்றும் ஏர் பம்பு ஆகியவை அத்தியாவசிய பணியின் அவசர அவசியம் கருதி ரூ.2545/- செலவு செய்யப்பட்டது. இதனை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன்படி வாகனத்திற்கு செலவினம் செய்யப்பட்டதனை அனுமதி | 192 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கிட மன்றப் பொருள் ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதி வழங்கலாம்<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி செலவினம் செய்யப்பட்டதனை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1138/2020/எச்1)** | | |
| **04** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண் த.நா.50X6429 காம்பேக்டர் வாகனத்திற்கு சாலை வரி Road Tax 31.03.2020ந்தேதியுடன் முடிவடைந்துள்ளதால், சாலை வரியினை மேலும் ஓராண்டுக்கு புதுப்பித்துதர சாலை வரி காப்பீடு தொகை ரூ.7676/- (ரூபாய் ஏழாயிரத்தி அறுநூற்று எழுபத்தியாறு மட்டும்) Registration Authority Thiruthuraipoondi என்ற நிறுவனத்திற்கு செலுத்தலாம். மன்ற பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** பொதுசுகாதாரப் பிரிவிற்கு 2020-2021ம் நிதியாண்டிற்கு உத்தேச செலவினத்திற்கு மன்ற தீர்மானம் எண் 181 நாள் 30.06.2020ல் நிர்வாக அனுமதி வழங்கியதை ஏற்று செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1147/2020/எச்1)** | **193** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 05 | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணி தனியார் பங்களிப்புடன் 30-06-2020-ல் நிறைவுபெறுவதால் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு டெண்டர் நடவடிக்கையில் இருந்து வருவதால் தனியார் பங்களிப்புடன் ஒப்பந்தப்பணி செய்துவரும் (CWDS) குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் திருத்துறைப்பூண்டி அவர்களுக்கு மேலும் மூன்று மாத காலத்திற்கு (01.07.2020 முதல்) ஒப்பந்தப்பணி நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றப்பொருள் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவினத் தொகையினை நகராட்சி நிர்வாக நலன் கருதி பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1716/2017/எச்1)** | 194 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப் பட்டது** |
| 06 | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ள வருவாய் துறைக்கு சொந்தமான அடிமனை புல எண் 132-க்கான ஆண்டு குத்தகை தொகை ரூ.17648/-ஐ 2020ஆம் ஆண்டுக்கு (பசலி எண் 1430/2020) வட்டாட்சியர் திருத்துறைப்பூண்டி அவர்களுக்கு செலுத்த ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதி வழங்கலாம்.<br>**2.** ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.17648/-ஐ வட்டாட்சியர் திருத்துறைப்பூண்டி அவர்களுக்கு செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.<br>**(ந.க.எண். 2822/99/எப்-1)** | 195 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப் பட்டது** |

<table>
<tr><td>07</td><td>இந்நகராட்சியின் 2019-2020ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. நிர்வாக அறிக்கை ஜெராக்ஸ் எடுக்கவும், பைண்டிங் செய்யவும் உத்தேச செலவினம் ரூ.6000/-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்டுள்ள செலவு தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் செலவு செய்து கொள்ளலாம்.<br><u>(ந.க.எண். 1425/2020/சி-1)</u></td><td>196</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப் பட்டது</td></tr>
<tr><td>08</td><td>இந்நகராட்சியில் குடிநீர் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய 4 பணியாளர்களை நியமிக்க நகராட்சி பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 04.06.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>நாள் விபரம்</td><td>கூலி விபரம்</td></tr><tr><td>1.</td><td>எஸ். மங்கையர்கரசி</td><td>1 நாள்</td><td>282/-</td></tr><tr><td>2.</td><td>எஸ். மாரியம்மாள்</td><td>1 நாள்</td><td>300/-</td></tr></table></td><td>197</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>

**அலுவலக குறிப்பு:**

1. **1.** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கை யர்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. **2.** பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 1358/2018/இ-1)**

</td><td></td><td></td></tr>
<tr><td>09</td><td>

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய 2 பணியாளர்களை நியமிக்க நகராட்சி பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 04.05.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>நாள் விபரம்</td><td>கூலி விபரம்</td></tr>
<tr><td>1.</td><td>எஸ். மங்கையர்கரசி</td><td>1 நாள்</td><td>282/-</td></tr>
<tr><td>2.</td><td>எஸ். மாரியம்மாள்</td><td>1 நாள்</td><td>300/-</td></tr>
</table>

</td><td>198</td><td>

**அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப் பட்டது**

</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>**1.** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கை யர்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>**2.** பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>**<u>(ந.க.எண்.3530/2017/இ-1)</u>** | | |

ஒம்/ ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/